கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

முன்னிலை திரு.தி.திருமால், பி.ஏ., பி.எல்.,

கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம், (பொறுப்பு)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24ஆம் நாள் செவ்வாய்க் கிழமை

அசல் வழக்கு எண்.64/2016

CNR No.TNKP.7000425/2016.

P.காரத்திக்

....வாதி

/எதிராக/

1 ஜெயலஷ்மி
2.காமாட்சி
3.கஸ்தூரி
4.பார்வதி
5.செல்வி
6.லலிதா அம்மாள்
7.ஏகாம்பர ரெட்டியார்
8.பெருமாள் ரெட்டியார்
9.மல்லிகா
10.மங்கை
11.M.சீனிவாசன்
12.B.கிரிஜா

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 12.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் R.அப்துல் ஹக்கீம், A.அதில் பாஷா, M.மேகலா, S.மகாலஷ்மி மற்றும் A.வரதராஜன் ஆகியோர் முன்னிலையாகியும், முதல் பிரதிவாதிக்காக R.அப்துல் ரஷீத் அவர்கள் முன்னிலைகயாகியும், 2 முதல் 12 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பிலும் உள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

வாதி இந்த வழக்கை, 23.01.2013 தேதியில் இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.114/2003 என்ற வழக்கில் பெற்ற சமாதான தீர்ப்பாணையை (Compromise decree) ரத்து செய்ய உத்தரவிட

கோரியும், 12ஆம் பிரதிவாதி புதிய கட்டிடம் மற்றும் கட்டுமான பணிகள் ஏதும் மேற்கொள்ள கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மற்றும் வழக்கின் செலவுத் தொகைக்காகவும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.வாதியின் வழக்குரையின் சுருக்கம்

வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையில், வாதி 8ஆம் பிரதிவாதியின் மகன் என்றும், வழக்கு சொத்து ஆதியில் தனது தாத்தா நடேச ரெட்டி மற்றும் அவரது மகன்கள் சம்மந்த ரெட்டி மற்றும் சுப்பிரமணி ரெட்டி ஆகிய மூவருக்கும் சொந்தமான இந்து கூட்டு குடும்ப சொத்து என்றும், மேற்படி நடேச ரெட்டி கடந்த 1961 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், மேற்படி நடேச ரெட்டியின் ஒரு மகனான சம்மந்த ரெட்டியார் கடந்த 27.12.1995 அன்று இறந்துவிட்டார் என்றும், மற்றொரு மகன் சுப்பிரமணிய ரெட்டி அவரின் தந்தை இறப்பதற்கு முன்பே தாவா சொத்து சம்பந்தமாக எந்தவித ஏற்பாடும் செய்யாமலேயே கடந்த 1944ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், இந்த வழக்கின் 1 முதல் 6 பிரதிவாதிகள் காலஞ்சென்ற சம்பந்த ரெட்டியின் மகள்கள் என்றும், 7 மற்றும் 8 பிரதிவாதிகள் மகன்கள் என்றும், 9ஆம் பிரதிவாதி காலஞ்சென்ற சுப்பிரமணியின் பேரனும், மணிகண்டன் என்பவரின் மகனும் ஆவார் என்றும், வழக்கு அட்டவணை 1, 2, 3, மற்றும் 5 ஆகியவை, வாதி மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு குடும்ப சொத்து என்றும், மேலும் இந்த வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.114/2003 என்ற வழக்கை காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு சொத்தின் மீது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், உண்மையில் வாதி, பிரதிவாதிகளுக்கு மேற்படி வழக்கை தாக்கல் செய்த நீதிமன்ற வரம்பிற்கு உள்ளே எந்த சொத்தும் இல்லை என்றும், மேற்படி நீதிமன்றத்தில் மோசடியாக அசல் வழக்கு எண்.114/2003-ல் நான்காவது அயிட்ட சொத்தான காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேடு கிராமத்தில் சர்வே எண்.584-ல் 40 சென்ட் நிலம் உள்ளதாக குறிப்பிட்டு தாக்கல் செய்து அதன் முன்னிலைக்கு ஒரு சமாதான தீர்ப்பாணையை பெற்று இருக்கிறார்கள் என்றும், மேற்படி சர்வே எண்.584 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான சொத்து என்றும், இந்த வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் சேர்ந்து கடந்த 23.01.2013 அன்று அசல் வழக்கு எண்.114/2003 என்ற வழக்கை தாக்கல் செய்து பெற்ற சமாதான தீர்ப்பாணை

செல்லாது என்றும், ஏனெனில், இந்த நீதிமன்ற வரம்பிற்கு உட்படாத சொத்தை சேர்த்து மேற்படி 114/2003 என்ற அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது செல்லத்தக்கதல்ல என்றும், பொய்யான மற்றும் கூட்டுக்குடும்பத்திற்கு சம்மந்தமில்லாத ஒரு சொத்தை சேர்த்து காஞ்சிபுரம் சார்பு நீதிமன்ற எல்லை வரம்பை போலியாக உறுவாக்கியுள்ளார்கள் என்றும், அது செல்லாது என்றும், மேலும் அந்த வழக்கில் 3ஆம் பிரதிவாதி 02.07.2007அன்று காலமாகிவிட்டார் என்றும், ஆனால் அந்த சங்கதியை மறைத்தும், அவரின் வாரிசுகளை மேற்படி வழக்கில் சேர்க்காமலும் மேற்படி சமாதான தீர்ப்பாணையை பெற்றது சட்டப்படி தவறு என்றும், இறந்த நபருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பாணை செல்லாது என்றும், மேற்படி அசல் வழக்கில் 9 முதல் 11 பிரதிவாதிகள் அதாவது காலஞ்சென்ற மணிகண்டன் என்பவரின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது செல்லாது என்றும், 1 முதல் 3 மற்றும் 6 பிரதிவாதிகள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றும், எனவே அவர்களுக்கு தமிழ்நாடு இந்து வாரிசு திருத்த சட்டம் 1/90 படி வழக்கு சொத்துக்களான கூட்டுகுடும்ப சொத்தில் சிறிதளவும் உரிமையில்லை என்றும், வழக்கு அட்டவணை 1 முதல் 3 மற்றும் 5 தவிர அரக்கோணம் தாலுக்கா அசநெல்லிகுப்பம் கிராமத்தில் 13.65.00 ஹெக்டேர் (33.71 ஏக்கர்ஸ்) உள்ளது என்றும் அது வாதி மற்றும் பிரதவாதிகளின் கூட்டு குடும்ப சொத்து என்றும், ஆனால் மேற்படி சொத்து வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், கூட்டு குடும்ப சொத்துக்கள் அனைத்தும் மூதாதையர் சொத்து என்றும், ஆனால் 1 முதல் 5 பிரதிவாதிகள் 7 முதல் 11 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஒரு பெயரளவுக்கான ஒரு சமாதான தீர்ப்பாணையை பெற்றுள்ளார்கள் என்றும், அதில் 1 முதல் 6 பிரதிவாதிகள் தனக்கு எந்த ஒரு பாகமும் தேவையில்லை எனக்கூறி கையொப்பம் செய்துள்ளார் என்றும், அதில் தனக்கு வசதிவாய்ப்புகள் அதிகம் இருப்பதாக கூறி அவர் பாகம் தேவையில்லை என கையொப்பம் செய்துள்ளார் என்றும், ஆனால் 1 முதல் 5 பிரதிவாதிகள் எந்த ஒரு விடுதலை பத்திரமும் மற்ற சொத்துக்களுக்கு எழுதி வாங்கவில்லை என்றும், மேலும் அந்த வழக்கை 7 முதல் 11 பிரதிவாதிகள் சரியான முறையில் எதிர்கொள்ளவில்லை என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகளோடு சேர்ந்து பொய்யாக அனைவரையும் சேர்த்து வாதி மற்றும் பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து கொண்டு மோசடியாக ஏற்படுத்திய சமாதான தீர்ப்பாணை செல்லத்தக்கதல்ல என்றும், மேலும் அந்த வழக்கில் 11ஆம் பிரதிவாதி வழக்கின்

விவரம் அனைத்தும் தெரிந்துகொண்டே 1 முதல் 5 பிரதவாதிகளுடன் சேர்ந்துகொண்டு மணிகண்டனின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல் பெயரளவுக்கு தீர்ப்பாணை பெற்றது, செல்லத்தக்கதல்ல என்றும், அது ரத்து செய்யப்படவேண்டியது என்றும், மேலும் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கிய சொத்துக்களின் மதிப்பை ஒப்பிடும்போது 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கிய தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களான வீடுகள் மிக அதிகமான மதிப்பு கொண்டவையாகும் என்றும், பாகப்பிரிவினை செய்யப்பட்டது சமமான பாகம் அல்ல என்றும், தாவா கூட்டு குடும்ப சொத்துக்கள் பிரித்துள்ள பாகத்தை பார்த்தால் இது ஒரு பெயரளவு சமாதான தீர்ப்பாணை என்பது தெரியவரும் என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகள் சமாதான தீர்ப்பாணையில் முதல் அயிட்டமான வீட்டை ஒரு பதிவு செய்த கிரைய பத்திரம் முன்னிலைக்கு கடந்த 14.08.2014 அன்று 12ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளதாகவும், மேற்படி கிரையம் செல்லத்தக்கதல்ல என்றும், மேலும், 12ஆம் பிரதிவாதி புதிய கட்டிடம் கட்ட முயற்சித்தார் என்றும், எனவே அவருக்கு எதிராகவும், முதல் அயிட்ட சொத்தில் புதியதாக கட்டடிடம் கட்டகூடாது என்றும் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, கடந்த 23.01.2013 அன்று அசல் வழக்கு எண்.114/2003-ல் பெற்ற சமாதான தீர்ப்பாணைணை ரத்து செய்யக் கோரியும், 12ஆம் பிரதிவாதி புதிய கட்டிடம் மற்றும் கட்டுமான பணிகள் ஏதும் மேற்கொள்ள கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. முதல் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்

முதல் பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில், வாதி வழக்கில் கூறிய சங்கதிகளை மறுப்பதாகவும், மேற்படி வழக்கிற்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றும், வாதி 2006ல் மேற்படி சமாதான தீர்ப்பாணை பற்றி நன்கு அறிந்திருந்தும், 2016 ஆண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே வழக்கு கால தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றும், உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றும், கடந்த பத்து வருடங்களாக மேற்படி சமாதான தீர்ப்பாணையின் மேல் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும், எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யாமலும் இருந்துவிட்டு தற்பொழுது தீய எண்ணத்தில் இந்த பொய்யான வழக்கை தாக்கல்

செய்துள்ளதாகவும், வாதி தனது வழக்குரையில் 8ஆம் பிரதிவாதியான தனது தகப்பனார் தற்பொழுது உயிருடன் இருப்பதாக தெரிவித்துவிட்டு மேற்படி 8ஆம் பிரதிவாதியின் மகனான வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டத்தை மீறிய செயல் என்றும், வாதியின் கொள்ளுதாத்தாவும் அவரது இரு மகன்களும் கூட்டுகுடும்ப உறுப்பினர்கள் என்பதை மறுப்பதாகவும், ஆரம்பம் முதலே நடேச ரெட்டியார் தனியாக வசித்து வந்ததாகவும், வாதிகள் அசல் வழக்கு எண்.114/2003, 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகளால் நீதிமன்ற எல்லைகள் பரிசீலிக்கப்பட்டு சமாதான மனு முன்னிலைக்கு சமாதான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், இதுநாள் வரை பிரதிவாதிகள் மேற்படி சமாதான தீர்ப்பாணை குறித்து எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்றும், வாதிகள் ஏற்கனவே சமாதான தீர்ப்பாணையின்படி சில சொத்துக்களை விற்றுவிட்டதாகவும், தற்போது இந்த வழக்கின் வாதி இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு வராது என்று கூறுவது தவறு என்றும், மேற்படி அசல் வழக்கு 114/2003-ல் வாதியின் தந்தை ஒரு தரப்பினராக இருந்தும் மேற்படி சமாதான தீர்ப்பாணை குறித்து எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றும், மேற்படி தீர்ப்பாணை அமலுக்கு வந்துவிட்டது என்றும், அதன்பிறகு மேற்படி வழக்கின் தரப்பினர்கள் தங்களுக்குரிய பாகத்தினை விற்றுவிட்டது வாதிக்கு நன்கு தெரியும் என்றும், வாதிக்கு அது குறித்து எதுவும் ஆட்சேபனை இருந்தால் முன்பே தெரிவித்திருக்கவேண்டும் என்றும், 17.01.2006 அன்று இது குறித்து வாதிக்கு தெரிந்திருந்தும், 23.01.2013ல் அளிக்கப்பட்ட சமாதான தீர்ப்பாணையின் மேல் 14.03.2016 அன்று, அதாவது பத்து வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், தனது தந்தையின் மூலம் தனக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று கூறும் வாதி தனது வழக்குரையில் அசல் வழக்கு எண்.114/2003 தாக்கல் செய்யும்பொழுது தான் இளவராக இருந்தார் என்பதை இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றும், சட்டப்படி ஒருவர் இளவராக இருந்தபோது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு, அந்த தீர்ப்பு குறித்து ஆட்சேபனை இருப்பின், அவர் மேஜரானதிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும், ஆனால் இந்த வழக்கில் மேற்படி வாதி தீர்ப்பாணை வழங்கப்பட்ட தேதியில் மேஜராகியிருந்த போதிலும், இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதியின் தகப்பனார் ஒரு தரப்பினரக சமரசத்திற்கான மனுவில்

கையெழுத்திட்டிருக்கும்பட்சத்தில், தனது தகப்பனாருக்கு தெரியாமல் சமரச தீர்ப்பாணை வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றும், 3ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதை பத்து வருடங்களுக்கு பின்னர் இந்த நீதிமன்றத்திற்கு தெரிவித்திருந்தபோதிலும், இதுநாள் வரை அவரது வாரிசுகள் மேற்படி சமரச தீர்ப்பாணை குறித்து எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றும், வாதி 1 முதல் 3 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு திருமணம் ஆகிவிட்ட காரணத்தால் கூட்டு குடும்ப சொத்திலிருந்து பாகம் பெற உரிமை இல்லை என்று கூறுவதை மறுப்பதாகவும், சொத்துக்களை வாங்கியவர்களிடையே குழப்பம் ஏற்படுத்துவதற்காக, சொத்தை வாங்கிய 12ஆம் பிரதிவாதியை, தரப்பினராக சேர்த்திருப்பதாகவும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

4.வழக்கெழுவினா வினாக்கள்

1. சமரச தீர்ப்பாணை செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

2. வாதி கோரியபடி கட்டுமானங்களை ஏற்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

3. வாதிக்கு வழங்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி காரத்திக் வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் சார்பாக வா.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் ஒரு அனிஃபா என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர் சார்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. ஆனால் வா.சா.1 குறுக்கு விசாரணையில் பி.சா.ஆ.1 குறியீடு செய்ப்பபட்டுள்ளது.

6.வழக்கெழுவினா 1 முதல் 3-ற்கான தீர்வு

வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையில், வாதி 8ஆம் பிரதிவாதியின் மகன் என்றும், வழக்கு சொத்து ஆதியில் தனது தாத்தா நடேச ரெட்டி மற்றும் அவரது மகன்கள் சம்மந்த ரெட்டி மற்றும் சுப்பிரமணி ரெட்டி ஆகிய மூவருக்கும் சொந்தமான இந்து கூட்டு குடும்ப சொத்து என்றும், மேற்படி நடேச ரெட்டி கடந்த 1961 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், மேற்படி நடேச

ரெட்டியின் ஒரு மகனான சம்மந்த ரெட்டியார் கடந்த 27.12.1995 அன்று இறந்துவிட்டார் என்றும், மற்றொரு மகன் சுப்பிரமணிய ரெட்டி அவரின் தந்தை இறப்பதற்கு முன்பே தாவா சொத்து சம்பந்தமாக எந்தவித ஏற்பாடும் செய்யாமலேயே கடந்த 1944ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், இந்த வழக்கின் 1 முதல் 6 பிரதிவாதிகள் காலஞ்சென்ற சம்பந்த ரெட்டியின் மகள்கள் என்றும், 7 மற்றும் 8 பிரதிவாதிகள் அவரது மகன்கள் என்றும், 9ஆம் பிரதிவாதி காலஞ்சென்ற சுப்பிரமணியின் பேரனும், மணிகண்டன் என்பவரின் மகனும் ஆவார் என்றும், வழக்கு அட்டவணை 1, 2, 3 மற்றும் 5 ஆகியவை, வாதி மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு குடும்ப சொத்து என்றும், மேலும் இந்த வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.114/2003 என்ற வழக்கை காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு சொத்தின் மீது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்தார்கள் என்றும், உண்மையில் வாதி, பிரதிவாதிகளுக்கு மேற்படி வழக்கை தாக்கல் செய்த நீதிமன்ற வரம்பிற்கு உள்ளே எந்த சொத்தும் இல்லை என்றும், மேற்படி நீதிமன்றத்தில் மோசடியாக அசல் வழக்கு எண்.114/2003-ல் நான்காவது அயிட்ட சொத்தான காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேடு கிராமத்தில் சர்வே எண்.584-ல் 40 செண்ட் நிலம் உள்ளதாக குறிப்பிட்டு தாக்கல் செய்து அதன் முன்னிலைக்கு ஒரு சமாதான தீர்ப்பாணையை பெற்று இருக்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி அசல் வழக்கு எண்.114/2003-ன் வழக்குரை, எதிர் வழக்குரை மற்றும் சமரச மனு ஆகியவை வாதி தரப்பில் வா**.**சா**.**ஆ**.1, 2,** மற்றும் **4** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. சர்வே எண்.584 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான சொத்து என்றும், இந்த வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் சேர்ந்து கடந்த 23.01.2013 அன்று அசல் வழக்கு எண்.114/2003 என்ற வழக்கை தாக்கல் செய்து பெற்ற சமாதான தீர்ப்பாணை செல்லாது என்றும், ஏனெனில், இந்த நீதிமன்ற வரம்பிற்கு உட்படாத சொத்தை சேர்த்து மேற்படி 114/2003 என்ற அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது செல்லத்தக்கதல்ல என்றும், பொய்யான மற்றும் கூட்டுக்குடும்பத்திற்கு சம்மந்தமில்லாத ஒரு சொத்தை சேர்த்து காஞ்சிபுரம் சார்பு நீதிமன்ற எல்லை வரம்பை போலியாக உறுவாக்கியுள்ளார்கள் என்றும், அது செல்லாது என்றும், மேலும் அந்த வழக்கில் 3ஆம் பிரதிவாதி 02.07.2007அன்று காலமாகிவிட்டார் என்றும், ஆனால் அந்த சங்கதியை மறைத்தும், அவரின் வாரிசுகளை மேற்படி

வழக்கில் சேர்க்காமலும் மேற்படி சமாதான தீர்ப்பாணையை பெற்றது சட்டப்படி தவறு என்றும், இறந்த நபருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பாணை செல்லாது என்றும், மேற்படி அசல் வழக்கில் 9 முதல் 11 பிரதிவாதிகள் அதாவது காலஞ்சென்ற மணிகண்டன் என்பவரின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது செல்லாது என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி மணிகண்டன் என்பவரின் இறப்பு சான்றிதழ் வாதி தரப்பில் வா.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. ஒன்று முதல் மூன்று மற்றும் ஆறு பிரதிவாதிகள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றும், எனவே அவர்களுக்கு தமிழ்நாடு இந்து வாரிசு திருத்த சட்டம் 1/90 படி வழக்கு சொத்துக்களான கூட்டுகுடும்ப சொத்தில் சிறிதளவும் உரிமையில்லை என்றும், வழக்கு அட்டவணை 1 முதல் 3 மற்றும் 5 தவிர அரக்கோணம் தாலுக்கா அசநெல்லிகுப்பம் கிராமத்தில் 13.65.00 ஹெக்டேர் (33.71 ஏக்கர்ஸ்) உள்ளது என்றும் அது வாதி மற்றும் பிரதவாதிகளின் கூட்டு குடும்ப சொத்து என்றும், ஆனால் மேற்படி சொத்து வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், கூட்டு குடும்ப சொத்துக்கள் அனைத்தும் மூதாதையர் சொத்து என்றும், ஆனால் 1 முதல் 5 பிரதிவாதிகள் 7 முதல் 11 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஒரு பெயரளவுக்கான ஒரு சமாதான தீர்ப்பாணையை பெற்றுள்ளார்கள் என்றும், அதில் 1 முதல் 6 பிரதிவாதிகள் தனக்கு எந்த ஒரு பாகமும் தேவையில்லை எனக்கூறி கையொப்பம் செய்துள்ளார் என்றும், அதில் தனக்கு வசதிவாய்ப்புகள் அதிகம் இருப்பதாக கூறி அவர் பாகம் தேவையில்லை என கையொப்பம் செய்துள்ளார் என்றும், ஆனால் 1 முதல் 5 பிரதிவாதிகள் எந்த ஒரு விடுதலை பத்திரமும் மற்ற சொத்துக்களுக்கு எழுதி வாங்கவில்லை என்றும், மேலும் அந்த வழக்கை 7 முதல் 11 பிரதிவாதிகள் சரியான முறையில் எதிர்கொள்ளவில்லை என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகளோடு சேர்ந்து பொய்யாக அனைவரையும் சேர்த்து வாதி மற்றும் பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து கொண்டு மோசடியாக ஏற்படுத்திய சமாதான தீர்ப்பாணை செல்லத்தக்கதல்ல என்று தெரிவித்துள்ளார்.

9. மேற்படி சமரச தீர்ப்பாணை வழக்கில் 11ஆம் பிரதிவாதி வழக்கின் விவரம் அனைத்தும் தெரிந்துகொண்டே 1 முதல் 5 பிரதவாதிகளுடன் சேர்ந்துகொண்டு மணிகண்டனின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல் பெயரளவுக்கு தீர்ப்பாணை பெற்றது, செல்லத்தக்கதல்ல என்றும், அது

ரத்து செய்யப்படவேண்டியது என்றும், மேலும் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கிய சொத்துக்களின் மதிப்பை ஒப்பிடும்போது 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கிய தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களான வீடுகள் மிக அதிகமான மதிப்பு கொண்டவையாகும் என்றும், பாகப்பிரிவினை செய்யப்பட்டது சமமான பாகம் அல்ல என்றும், தாவா கூட்டு குடும்ப சொத்துக்கள் பிரித்துள்ள பாகத்தை பார்த்தால் இது ஒரு பெயரளவு சமாதான தீர்ப்பாணை என்பது தெரியவரும் என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகள் சமாதான தீர்ப்பாணையில் முதல் அயிட்டமான வீட்டை ஒரு பதிவு செய்த கிரைய பத்திரம் முன்னிலைக்கு கடந்த 14.08.2014 அன்று 12ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி சிரைய ஆவணம் நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கிரையம் செல்லத்தக்கதல்ல என்று கூறுகிறார்.

10. மேலும், 12ஆம் பிரதிவாதி புதிய கட்டிடம் கட்ட முயற்சித்தார் என்றும், எனவே அவருக்கு எதிராகவும், முதல் அயிட்ட சொத்தில் புதியதாக கட்டடிடம் கட்டகூடாது என்றும் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, கடந்த 23.01.2013 அன்று அசல் வழக்கு எண்.114/2003-ல் பெற்ற சமாதான தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரியும், 12ஆம் பிரதிவாதி புதிய கட்டிடம் மற்றும் கட்டுமான பணிகள் ஏதும் மேற்கொள்ள கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

11. முதல் பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில், வாதி வழக்கில் கூறிய சங்கதிகளை மறுப்பதாகவும், மேற்படி வழக்கிற்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றும், வாதி 2006ல் மேற்படி சமாதான தீர்ப்பாணை பற்றி நன்கு அறிந்திருந்தும், 2016ஆம் ஆண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே வழக்கு கால தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றும், உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றும், கடந்த பத்து வருடங்களாக மேற்படி சமாதான தீர்ப்பாணையின் மேல் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும், எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யாமலும் இருந்துவிட்டு தற்பொழுது தீய எண்ணத்தில் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி தனகு வழக்குரையில் 8ஆம் பிரதிவாதியான தனது தகப்பனார்

தற்பொழுது உயிருடன் இருப்பதாக தெரிவித்துவிட்டு மேற்படி 8ஆம் பிரதிவாதியின் மகனான வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டத்தை மீறிய செயல் என்றும், வாதியின் கொள்ளுதாத்தாவும் அவரது இரு மகன்களும் கூட்டுகுடும்ப உறுப்பினர்கள் என்பதை மறுப்பதாகவும், ஆரம்பம் முதலே நடேச ரெட்டியார் தனியாக வசித்து வந்ததாகவும், வாதிகள் அசல் வழக்கு எண்.114/2003, 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகளால் நீதிமன்ற எல்லைகள் பரிசீலிக்கப்பட்டு சமாதான மனு முன்னிலைக்கு சமாதான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்று கூறுகிறார்.

12. இதுநாள் வரை பிரதிவாதிகள் மேற்படி சமாதான தீர்ப்பாணை குறித்து எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்றும், வாதிகள் ஏற்கனவே சமாதான தீர்ப்பாணையின்படி சில சொத்துக்களை விற்றுவிட்டதாகவும், தற்போது இந்த வழக்கின் வாதி இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு வராது என்று கூறுவது தவறு என்றும், மேற்படி அசல் வழக்கு 114/2003-ல் வாதியின் தந்தை ஒரு தரப்பினராக இருந்தும் மேற்படி சமாதான தீர்ப்பாணை குறித்து எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றும், மேற்படி தீர்ப்பாணை அமலுக்கு வந்துவிட்டது என்றும், அதன்பிறகு மேற்படி வழக்கின் தரப்பினர்கள் தங்களுக்குரிய பாகத்தினை விற்றுவிட்டது வாதிக்கு நன்கு தெரியும் என்றும், வாதிக்கு அது குறித்து எதுவும் ஆட்சேபனை இருந்தால் முன்பே தெரிவித்திருக்கவேண்டும் என்றும், 17.01.2006 அன்று இது குறித்து வாதிக்கு தெரிந்திருந்தும், 23.01.2013ல் அளிக்கப்பட்ட சமாதான தீர்ப்பாணையின் மேல் 14.03.2016 அன்று, அதாவது பத்து வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறுகிறார்.

13. தனது தந்தையின் மூலம் தனக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று கூறும் வாதி தனது வழக்குரையில் அசல் வழக்கு எண்.114/2003 தாக்கல் செய்யும்பொழுது தான் இளவராக இருந்தார் என்பதை இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றும், சட்டப்படி ஒருவர் இளவராக இருந்தபோது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு, அந்த தீர்ப்பு குறித்து ஆட்சேபனை இருப்பின், அவர் மேஜரானதிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும், ஆனால் இந்த வழக்கில் மேற்படி வாதி தீர்ப்பாணை வழங்கப்பட்ட தேதியில் மேஜராகியிருந்த போதிலும், இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும்,

வாதியின் தகப்பனார் ஒரு தரப்பினரக சமரசத்திற்கான மனுவில் கையெழுத்திட்டிருக்கும்பட்சத்தில், தனது தகப்பனாருக்கு தெரியாமல் சமரச தீர்ப்பாணை வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றும், 3ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதை பத்து வருடங்களுக்கு பின்னர் இந்த நீதிமன்றத்திற்கு தெரிவித்திருந்தபோதிலும், இதுநாள் வரை அவரது வாரிசுகள் மேற்படி சமரச தீர்ப்பாணை குறித்து எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்று கூறுகிறார்.

14. வாதி தெரிவிப்பது யாதெனில் 1 முதல் 3 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு திருமணம் ஆகிவிட்ட காரணத்தால் கூட்டு குடும்ப சொத்திலிருந்து பாகம் பெற உரிமை இல்லை என்று கூறுவதை மறுப்பதாகவும், சொத்துக்களை வாங்கியவர்களிடையே குழப்பம் ஏற்படுத்துவதற்காக, சொத்தை வாங்கிய 12ஆம் பிரதிவாதியை, தரப்பினராக சேர்த்திருப்பதாகவும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

15. இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. வா.சா.1 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "வழக்கின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் அசல் வழக்கில் வழங்கப்பட்ட சமாதான தீர்ப்பு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அது மட்டுமல்லாமல் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி உள்ளீர்கள் என்றால் சரிதான். யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் தெரியுமா என்றால் தெரியும். யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் எங்கள் அத்தை ஆறு பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உறுத்து கட்டளை பரிகாரம் நீங்கள் 12வது பிரதிவாதி கிரிஜா என்பவருக்கு எதிராக மட்டும் கேட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன் பால் டிஸ்ட்ரிபியூஷன் திருமலா பால் ராணிப்பேட்டை மாவட்டத்தில் செய்து வருகிறேன். அது இல்லாமல் பெட்ரோல் பங்க் இருக்கிறது. மேற்படி வியாபாரங்கள் உங்களுடைய சித்தப்பா, அத்தை ஆகியோர் சேர்ந்து செய்கிறீர்கள் என்றால் இல்லை. இந்த வழக்கில் எட்டாவது பிரதிவாதி பெருமாள் ரெட்டியார் உங்களது தகப்பனார் என்றால் சரிதான். நடேசன் ரெட்டியாரின் ஒரே மகன் சம்பந்த ரெட்டியார் 1995 இல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவருடைய மற்றொரு மகன் சுப்பிரமணி எப்பொழுது இறந்து விட்டார் என்றால் 1949 என்று

நினைக்கிறேன். ஒன்று முதல் ஆறு வரையிலான பிரதிவாதிகள் யாருடைய மகள்கள் என்றால் சம்பந்த ரெட்டியாரின் மகள்கள் ஆவார்கள். ஏழு, எட்டு பிரதிவாதிகள் முறையே ஏகாம்பர ரெட்டியார், பெருமாள் ரெட்டியார் ஆகியோர் சம்பந்த ரெட்டியாரின் மகன்கள் ஆவார். நீங்கள் வழக்கில் எத்தனை ஐட்டம் சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் நான்கு ஐட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் ஐந்து ஐட்டம் உள்ளது என்றால் சரிதான். ஐந்து ஐட்டம் சொத்துக்களும் கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரிதான். தற்பொழுது உங்களுக்கு என்ன வயதாகிறது என்றால் 36 ஆகிறது. எந்த ஆண்டு நீங்கள் பிறந்தீர்கள் என்றால் நான் கடந்த 1989 ஆம் ஆண்டு பிறந்தேன். அசல் வழக்கு எண் 114/2003 என்கிற வழக்கு உங்கள் அத்தை உங்கள் அப்பாவிற்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு போலியானது என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். போலியான தீர்ப்பானை அதாவது சமரச உடன்படிக்கை செல்லாது என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பானை சமரசத்தின் வாயிலாக மோசடியாக பெறப்பட்டது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து இந்த நீதிமன்ற வரம்பிற்குள் வராது என்று சொன்னீர்கள் என்றால் சரிதான். போலியான எல்லை வரையறைகளை உருவாக்கி உள்ளதால் அது செல்லத்தக்கது அல்ல என்று சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தாக்கல் செய்யும்பொழுது உங்களுக்கு என்ன வயது என்றால் 14 வயது ஆகும். சமாதான தீர்ப்பு எப்பொழுது வழங்கப்பட்டது என்றால் 2013ஆம் ஆண்டு வழங்கப்பட்டது அப்பொழுது உங்களுக்கு என்ன வயது என்றால் 24 வயது ஆகும். சமாதான டிகிரி 2006 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியில்லை. நீங்கள் அவ்வாறு பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் அந்த ஆவணத்தை தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் தாக்கல் செய்துள்ளேன். உங்களிடம் காட்டப்படுவது மேற்படி முதல் நிலை தீர்ப்பாணை என்றால் சரிதான். அந்த முதல் நிலை தீர்ப்பாணை ஆவணம் பி.சா.ஆ**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** சமாதான தீர்ப்புக்கு எதிராக உங்கள் தந்தை மேல்முறையீடு செய்தார்களா என்றால் மேல்முறையீடு செய்யவில்லை. மேற்படி வழக்கில் உங்கள் தந்தையார் இரண்டாவது பிரதிவாதி அவர் பதில் தாக்கல் செய்தாரா என்றால் அவருக்கு வக்கீல் இருந்தார்கள். மேற்படி தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்ட பிறகு 10 ஆண்டுகள் கழித்து

தான் இந்த வழக்கு நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பொழுது எனக்கு தெரியாது இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பொழுது தான் தெரியும். மேற்படி வழக்கில் நான்காவது ஐட்டம் சொத்தாக இருந்த சொத்தினை நீங்கள் இந்த வழக்கில் அரசாங்க சொத்து என்று சொல்லி வழக்கு நடத்துகிறீர்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து அரசாங்க சொத்துதான் என்று காட்டுவதற்கு உங்கள் தரப்பில் நீங்கள் ஏதேனும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். நீங்கள் பன்னிரண்டாவது பிரதிவாதிக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டுமென்று ஒரு மனு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். எதற்காக அந்த இடைக்கால மனு தாக்கல் செய்தீர்கள் என்றால் கடந்த 2007 ஆம் ஆண்டு மணிகண்ட ரெட்டியார் என்பவர் இறந்து விட்டார். அவர் இல்லாத பொழுது 2013 ஆம் ஆண்டு இறுதிநிலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அரசாங்க சொத்து அரக்கோணம் நீதிமன்ற எல்லைக்குள் வருகிறது அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அந்த வழக்கினை காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தவறு ஆகும். நீங்கள் கூறுவது தவறு அதிகார நீதிவரம்பு நீதிமன்றத்திற்கு தெரிந்து தான் அந்த வழக்கு எடுத்து நடத்தப்பட்டது நீதிமன்றம் அதை நடத்தியது என்றால் அதை நீதிமன்றம் நடத்தவில்லை வழக்கறிஞர்கள் பொய்யாக சமாதான உடன்படிக்கை ஜோடித்து நீதிமன்றத்தை ஏமாற்றி தீர்ப்பு வழங்கினார்கள். மாவட்ட நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்த இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் எண் தெரியுமா என்றால் தெரியும் அது சி.எம்.ஏ.10/2017 ஆகும். அது எப்பொழுது தள்ளுபடி ஆனது என்கிற விவரம் தெரியுமா என்றால் ஆறு மாதங்களுக்கு முன்பு தள்ளுபடி ஆகிவிட்டது. நீங்கள் தான் அந்த மேல்முறையீடு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் உங்கள் தகப்பனார் எதிர்வாதியாக இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான்காவது ஐட்ட சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்து இல்லை என்று கூறி அது கூட்டுக் குடும்ப சொத்து தான் என்று குறிப்பிட்டு உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி இல்லை. ஒன்று முதல் நான்கு வரையிலான ஐட்ட சொத்துக்கள் எந்த ஊரில் இருக்கிறது என்றால்அரக்கோணம் நெமிலி, அசநெல்லிகுப்பம் என்கிற ஊரில் இருக்கிறது ஒரு சொத்து மட்டும் காஞ்சிபுரத்தில் இருக்கிறது. 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் ஆறாம் பிரதிவாதிகள் சேர்ந்து

தனக்கு பாகம் தேவையில்லை என்று எழுதிக்கொடுத்துள்ளதாக உங்களுடைய முதல் விசாரணையில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரியில்லை. விடுதலை பத்திரம் மற்ற சொத்துக்களுக்கு எழுதி வாங்கவில்லை என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். 7 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் அவர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு டிகிரி வாங்கியது தவறு என்று நீங்கள் பிரமாண வாக்குமூலத்தில் சொல்வது தவறு என்றால் சரியில்லை. அசல் வழக்கு எண் 114/2003 என்கிற வழக்கு சமரசமாக தீர்ந்து விட்டது அதை எதிர்த்து உங்கள் தகப்பனார் மேல்முறையீடு செய்யவில்லை. அதேபோல் நீங்களும் அந்த வழக்கினை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை மேற்படி சூழ்நிலையில் இந்த வழக்கு நீங்கள் தாக்கல் செய்தது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. அந்த வழக்கில் வேறு ஒரு சொத்தினை போட்டுவிட்டு இந்த வழக்கில் வேறு ஒரு சொத்து விவரத்தை கொடுத்து விட்டு இந்த வழக்கில் அந்த வழக்கின் உடைய சமரச தீர்ப்பினை செல்லாது என்று கோர முடியாது என்றால் சரியில்லை. இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதால் பிரதான வழக்கும் உங்களுக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. ஏற்கனவே சார்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பினை மற்றொரு சார்பு நீதிமன்றம் செல்லாது என்று கூற முடியாது என்றால் சரி இல்லை. இந்த வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை. பத்து ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து வாதியின் தந்தை மற்றும் அவரது உடன்பிறந்தவர்களுக்கிடையே பாகப்பிரவினை சமரச தீர்ப்பின் வாயிலாக ஏற்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. அதன்பிறகு காலம் கடந்து இந்த வழக்கு தாக்கல் செய்ப்பட்டுள்ளது தெரியவருகிறது. எது எப்படி இருப்பினும் இந்த வழக்கை பொறுத்த அளவில் வாதி வழக்கு சொத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அந்த பாகப்பிரிவினை பரிகாரம் இந்தவழக்கை பொறுத்தளவில் மிகவும் அடிப்படையான கோருரிமை ஆகும். குறித்த வகை நிவாரண சட்டம்(Specific Relief Act) 41 எச்-ன்படி பாகப்பிரிவினை பரிகாரம் கோராமல் அதாவது அவசியமான பரிகாரம் கோராமல் அதனை தவிர்த்துவிட்டு ஏற்கனவே

இந்த நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.114/2003 பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பு செல்லாது, 12ஆம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்று வழக்கில் கோரியுள்ளது போதுமான பரிகாரம் அல்ல என்றும், பாகப்பிரிவினை பரிகாரம் கோராததால் மேற்படி பரிகாரங்கள் வாதிக்கு வழங்கினாலும் போதுமானதல்ல என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு வழங்கினாலும் வாதிக்கு எந்த ஒரு நிவாரணமும் வழங்காது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

16. சமரச உடன்படிக்கை செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் இந்த வழக்கில் தீர்மானிக்க போதுமான பரிகாரம் அல்ல என்றும், அது ஏற்கத்தக்கது அல்ல என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. வாதி இந்த வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கோராமல் மற்ற பரிகாரங்கள் கோரியிருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. பாகப்பிரிவினை பரிகாரம் வழங்காமல் இதர பரிகாரங்கள் வழங்கி யாதொரு பயனும் வாதிக்கு விளைவிக்கப் போவதில்லை என்று இந்த நீதிமன்றம் மேற்சொன்னவாறு கருதுகிறது. வாதி சொத்துக்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால் சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோராமல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அத்தியாவசிய பரிகாரம் கோராமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காரணத்தினால் நுட்ப அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதி தீர்மானிக்கிறது. அவ்வாறே முடிவும் செய்கிறது. பிரதான பொருண்மை மேற்சொன்னவகையில் தீர்மானிக்கப்பட்டுவிட்டபடியால், மற்ற பொருண்மைகள் பற்றி இந்த வழக்கில் தீர்மானிக்கவேண்டியதில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. பாகப்பிரிவினை பரிகாரம் கோராததால், அசல் வழக்கு எண்.114/2003 பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பு செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 1 முடிவு செய்யப்படுகிறது. பாகப்பிரிவினை பரிகாரம் கோராததால் 12ஆம் பிரதிவாதிக்கு எதிராக கட்டுமானங்கள் கட்டக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 2 முடிவு செய்யப்படுகிறது. பாகப்பிரிவினை பரிகாரம் கோராததால் அசல் வழக்கு எண்.114/2003 பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பு செல்லாது என்ற விளம்புகை பரிகாரமும், 12ஆம் பிரதிவாதி கட்டுமானங்கள் கட்டக்கூடாது என்ற நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 1 மற்றும் 2 முடிவு செய்துவிட்டபடியல் வாதிக்கு இதர பரிகாரம் எதுவும் வழங்த்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 3 முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக இந்த அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

சுருக்கெழுத்து தட்டச்சருக்கு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 24ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.03.24 15:53:54 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.(பொறுப்பு)

<u>வாதி தரப்பு சாட்சிகள்.</u>
வா.சா.1 கார்த்திக்
வா.சா.2 அனிபா

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 10.07.2023 | காஞ்சிபுரம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.114/2003 -ன் வழக்குரை நகல். |
| வா.சா.ஆ.2. | 01.12.2006 | காஞ்சிபுரம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.114/2003 -ன் மணிகண்டன் என்பவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரை நகல். |
| வா.சா.ஆ.3. | 08.02.2016 | மணிகண்டன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல். |
| வா.சா.ஆ.4. | 23.01.2013 | காஞ்சிபுரம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.114/2003 -ல் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனு எண்.328/2006 நகல். |
| வா.சா.ஆ.5. | 14.02.2016 | கூட்டு பட்டா எண்.489 இணைய நகல். |
| வா.சா.ஆ.6. | 06.11.2015 | காஞ்சிபுரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அளித்த கடிதம் அசல். |
| வா.சா.ஆ.7. | 14.10.2014 | ஜெயலஷ்மி, காமாட்சி, கஸ்தூரி, பார்வதி, செல்வி ஆகியோர் கிரிஜா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.7108/2014 நகல். |
| வா.சா.ஆ.8. | | வழக்கு சொத்து குறித்த வில்லங்க சான்று |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்- இல்லை.</u>

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1. | 17.01.2006 | காஞ்சிபுரம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.114/2003 -ன் முதல்நிலை தீர்ப்பாணை நகல். |

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.03.24 15:54:27 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.(பொறுப்பு).